தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 4-9-2014
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**விவசாயிகளும் பட்டதாரி ஆகலாம் வேளாண்மைப் பல்கலைக்கழக திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்குநர் தகவல்**

உலக அளவில் முதல்முறையாக விவசாயிகளுக்கென்றே வழங்கப்படும் திறந்தவெளி மற்றும் தொலைதூரக் கல்வி இயக்ககத்தின் பட்டப்படிப்பு இளநிலை பண்ணைத் தொழில்நுட்பம் ஆகும். இந்த பட்டப்படிப்பு உழவர் பெருமக்கள் தாமும் ஒரு பட்டதாரி என்ற பெருமையை பெறச்செய்யும் மூன்றாண்டு இளநிலை பட்டப்படிப்பாகும். இந்த படிப்பினை 2010-ம் ஆண்டு முதல் 854 விவசாய மாணவர்கள் பல்வேறு பருவங்களில் படித்து வருகிறார்கள்.

இந்தப் படிப்பு வேளாண்மைத் தொழிலை விஞ்ஞான மற்றும் வணிக அடிப்படையில் செய்வதற்கு வழிகாட்டுகிறது. வேளாண் பெருமக்கள் வேளாண்மை சார்ந்த சுயதொழில் தொடங்க தேவையான தொழில்நுட்ப அறிவுத் திறனை மேம்படுத்தி சுயதொழில் முனைவோராக வழிகாட்டுகிறது. வேளாண்மையில் அதிக உற்பத்தி பெறத் தேவையான அனைத்து நவீன பண்ணைத் தொழில்நுட்பங்களும் இந்தப் பாடத் திட்டத்தில் வழங்கப்படுகிறது.

இந்தப் பாடத்திட்டத்தில் பயிர் உற்பத்தி, பயிர்ப் பாதுகாப்பு, தோட்டக்கலை, வேளாண் பொறியியல், மனையியல், வேளாண் பொருளாதாரம் மற்றும் சந்தைப்படுத்துதல், வனவியல், கால்நடை மேலாண்மை, சிறுதொழில் முனைதல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த 24 பாடங்கள் நடத்தப்படுகின்றன. அனைத்துப் பாடங்களும் எளிமையான முறையில் வடிவமைக்கப்பட்டு ஆறு பருவங்களில் தமிழில் நடத்தப்படுகின்றன. நவீன வேளாண்மைத் தொழில்நுட்பங்கள் நேர்முகப் பயிற்சி வகுப்புகள் மற்றும் செயல் விளக்கங்களுடன் மாணவர்களுக்கு நடத்தப்படுகின்றது.

நேர்முகப் பயிற்சி வகுப்புகள் மாதம் ஒருமுறை இரண்டு நாட்கள் மட்டும் (சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில்) நடைபெறுகிறது. தேர்வுகளை எழுதுவதற்கு குறைந்தபட்சம் 60 சதவிகித பயிற்சி வகுப்புகளுக்கு வந்திருக்க வேண்டும். தேர்வுகளை தமிழில் மட்டுமே நடத்தப்படும்.

அந்த படிப்பில் 10-ம் வகுப்பு சேர்ந்த 27 வயது நிரம்பிய அனைவரும் சேர்ந்து படிக்கலாம். ஒரு பருவத்திற்கு ரூ. 4,000/- வீதம் 6 பருவங்களுக்கு ரூ. 24,000/- கட்டணமாக செலுத்த வேண்டும். மேலும் பயிற்சிக் கட்டணம் எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்பட மாட்டாது.

விண்ணப்பப் படிவத்தை www.tnau.ac.in என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்யலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் மதிப்பெண் பட்டியல் மற்றும் மாற்றுச் சான்றிதழ்களின் நகல்கள், ரூ. 4,100/-க்கு காசோலை (The Director, DODL, TNAU, Coimbatore payable at SBI, TNAU Branch என்ற பெயரில் ) ஆகியவற்றை இணைத்து The Director, Directorate of Open and Distance Learning, TNAU, Coimabtore – 641 003 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். இளநிலை பட்டப்படிப்பிற்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் **9-9-2014.**

மேலும் விபரங்களுக்கு 0422-6611229 / 94890 51046 என்ற தொலைபேசிக்கு தொடர்பு கொள்ளவும்.

மக்கள் தொடர்பு அலுவலர்